**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.11/2024 – PW-5**

| | |
|---|---|
| Name | திரு.ராஜா |
| Husband/Father Name | கணேசன் |
| Village /Area | சென்னை |
| Taluk | சென்னை |
| Occupation | போக்குவரத்து |
| Age | 45 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 15.07.2025.

**(எதிரி 1 ஆஜர். எதிரி 2 முதல் 4 வரை கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சென்னையில் கண்டெய்னர் லாரி வாடகைக்கு விடுவதற்கு வைத்திருந்தேன் அதற்கு தனித்தனியே ஓட்டுநர்கள் இருந்தார்கள். 08.04.2010 அன்று சென்னையில் இருந்து ஆந்திரா குப்பத்திற்கு ஜெபிஆர். ஸ்டீல் கம்பனிக்கு இறக்குமதி செய்வது வாடிக்கையாக நடப்பது தான். அதே போல் அன்று இரவு சுமார் 4 இலட்சம் மதிப்புள்ள இரும்பு உதிரி பாகங்கள் ஏற்றிக்கொண்டு ஓட்டுநர் தர்மராஜ் என்பவர் லாரியின் பதிவு எண். TN 01 X 1533 என்ற வாகனத்தில் ஆந்திரா குப்பத்திற்கு ஜெபிஆர்இரும்பு உதிரி பாகங்கள். ஸ்டீல் கம்பனிக்கு அனுப்பினோம். தர்மராஜ் என்பவருக்கு வாகனத்தின் வழி செலவிற்காக ரூபாய் 8,500 ஐ மற்றொரு வாகன ஓட்டுநர் மோகன் ராஜ் என்பவரிடம் கொடுத்து தர்மராஜ் என்பரிடம் கொடுக்க சொல்லி அவரும் கொடுத்தார். தர்மராஜ் என்பவருடைய கைப்பேசி பழுதடைந்திருந்தாதால் என்னுடைய

வீட்டில் இருந்த கைப்பேசி ஒன்றை அவரிடம் கொடுத்தனுப்பினேன் அவரும் இரும்பு உதிரி பாகங்களுடன் TN 01 X 1533 என்ற வாகனத்தை ஓட்டி சென்றார். மறுநாள் 09.04.2010 வரை அவரிடம் எந்த தகவலும் வரவில்லை. பலமுறை தொடர்பு கொண்டும் மாலை வரை எந்த தகவலும் வராததால் நான் மணலி காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றேன். நான் வாய் மொழியாக புகார் கொடுத்தேன். போலீசார் என்னிடம் தேடிப் பார்க்க சொன்னார்கள். மேற்படி நிறுவனத்திற்கும் லாரி சென்ற சேராத காரணத்தால் நான் மற்றம் மற்ற ஓட்டுநர்களும் தர்மராஜ் உடைய தந்தையும் சேர்ந்து பல இடங்களில் தேடிப் பார்த்தோம். மணலி காவல் நிலையத்தில் எனக்கு லோடு கொடுத்தவர் பழனிச்சாமி என்பவர் மணலி காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் கொடுத்தார். 11.04.2010 அன்று எனது வண்டி நெய்வேலி அருகே நின்றுக்கொண்டிருப்பதாக வண்டியில் இருந்த எனது தொலைபேசி எண்ணை பார்த்து அங்கிருந்த நபர் ஒருவர் எனக்கு தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தார். நாங்கள் சென்று பார்த்த போது இரும்பு லோடு இல்லாமல் லாரி மட்டும் நின்றுக்கொண்டிருந்தது. ஓட்டுநர் அங்கு இல்லாததால் பல இடங்களில் தேடிப்பாரத்தோம். வாகனத்தை மணலி காவல் நிலையத்திற்கு எடுத்துசென்றோம். 17.10.2010 அன்று கலைஞர் தொலைக்காட்சியல் காவேரிப்பாக்கம் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கை, கால் கட்டிய நிைலையில் கிணற்று நீரில் ஒரு நபர் இறந்து கிடப்பதாக தகவல் தெரிந்து கொண்டு அதில் அவர் அணிந்திருந்த உடை மற்றும் அணிகலன்களை பார்த்து நாங்கள் மணலி காவல் நிலையத்தில் தெரிவித்தோம் பின் காவேரிப்பாக்கம் காவல் நிலையம் வந்து ஓட்டுநர் தர்மராஜ் அணிந்திருந்த முக்கால் பேண்ட், சிகப்பு நிற சட்டை, கையில் கருப்பு நிற பேண்டு

மற்றும் காவல் துறையினர் போட்டோவை காண்பித்ததை வைத்து இறந்தவர் ஓட்டுநர் தர்மராஜ் தான் என்று அடையாளம் நானும் என்னுடன் வந்தர்களும் தர்மராஜின் தந்தையும் அடையாளம் காண்பித்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களில் உள்ள நபர் தான் என்னிடம் ஓட்டுநராக பணிபுரிந்து இறந்த தர்மராஜ் ஆகும் அது சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவேரிப்பாக்கம் காவல் நிலைய ஆய்வளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**ஒம்./-திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**